கைகேயியும் கூனியும்.

12-1916

ஆர்யதர்மம்.

புத். 3.
ஸஞ். 7

பிங்களஹூ கார்த்திக சுத்தபஞ்சமி.

ஸ்ரீ ராம விஜயம்.

(முன் தொடர்ச்சி.)

அயோத்யா காண்டம்.

அத்தியாயம் 2.

ஸ்ரீ பரதனது தாயாரான கைகேயியின் அரண்மனையின் உப்பரிகையின்மீது அவ்வழகிய அரண்மனைக்குத் திருஷ்டி பரிஹாரகமாய் வைத்த பூதமென்னும்படி ஒரு கூனற் கிழவி தோன்றினாள். இவள் எங்கிருந்து வந்தாள்? ஏன் வந்தாள்? இப்படியும் ஒரு பிறப்பு ஏற்படவேண்டுமா? இவள் எதற்காகப் பிறந்தாள்? என்று கேள்விக்

குப் பதில் சொல்லுவது பிரயாசமானதாகும். கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதுபோல் இவளெங்கிருந்து வந்தாள் என்று நாளைக்கும் எல்லோரும் வெறுப்புடன் இவளைப் பற்றிக் கேட்பார்கள், என்பது நிச்சயம். உடம்பின் கோணல்களுடன் இவள் மனமும் கோணலுள்ளதென்று இவளது கொடிய கண்களும் அதிர்ச்சியுள்ள நடையும் தெரிவிக்கும். இந்தக் கூனி உப்பரிகையின் ஓரமாய் வந்து நின்று நகரத்தைச் சுற்றி முற்றி வெகுநேரம் ஏற இறங்கப் பார்த்தாள். மெழுகிக் கோலமிடப்பட்ட வீதிகளையும் கொடிகள் தோரணங்களுடன் காணப்படும் வீடுகளையும் அத்தர் புனுகு முதலான சுகந்த வஸ்துக்களை எடுத்துக் கொண்டு இங்குமங்கும் வாத்தியங்கள் கோஷிக்கப் பரப்பரப்பாய்ச் செல்லும் புருஷர்களையும் அழகிய பட்டுச் சேலைகளையுடுத்தி அங்கமெல்லாம் அலங்கரித்துக் கொண்டு இங்குமங்கும் உல்லாஸமாய்ச் சஞ்சரிக்கும் ஸ்திரீகளையும் கவனித்துப் பார்த்தாள். "நமக்குக்கூடத் தெரியாமல் இந்நகரத்தில் என்ன உத்ஸவங்கள் நடைபெறுகின்றனவோ! தெரியவில்லையே. நான் பிறந்த நாளாய் இவ்விதமான காட்சியைக் கண்டதில்லை. என்ன விசேஷமடி?" என்று அச்சமயத்தில் அங்குவந்த ஒரு சேடியை அவள் கேட்டாள். "மந்தரே! உனக்கு எப்பொழுதும் தூக்கந்தான். நாளைய தினம் ஸ்ரீ ராமனுக்கு யுவராஜ பட்டாபிஷேகம் என்பது உனக்குத் தெரியாதா? ராமனிடத்தில் அளவிடக் கூடாத அன்புடன் கூடிய ஜனங்கள் இப்படி இவ்வபிஷேகத்தைக் கொண்டாட ஆரம்பிப்பது ஆச்சரியமா?" என்று சேடி பதில் உரைத்தாள். இதைக் கேட்டதும் தனது ஆஸ்தியை யெல்லாம் பறிகொடுத்தவள்போல் கூனி கடுகடுத்தாள். கொடிய எண்ணங்களெல்லாம் குழம்பிய மனதுடன் "நிஜந்தானா?

என்ன அநியாயம்!" என்று சொல்லிக்கொண்டே உப்பரிகையினின்று புலி பாய்வதுபோல் ஒரே பாய்ச்சலாய் சுகமாய் நித்திரைபுரியும் கைகேயியினிடம் வந்து "என்ன தூக்கம்?" என்றதட்டி அவளை எழுப்பினாள். கைகேயி கண்களைத் துடைத்துக்கொண்டு "அடி மந்தரே! என்ன படபடப்பு. வியர்க்க வியர்க்க ஓடி வருவானேன்? எல்லோரும் சவுக்கியம்தானே!" என்று கேட்டாள். "எல்லோரும் சுகமாய்த்தானிருக்கிறார்கள். உனக்குத்தான் சகல சுகங்களும் இன்று முதல் போய்விட்டது. உனது அழகும் மங்கைப்பருவமும் சிறிதும் பயன்படவில்லை. மகாராஜாவுக்குக் கண்மணியாய் உலகமெல்லாம் புகழ உன்னைப் பார்த்த இந்தக் கண்களால் கௌஸல்யைக் கடிமைபட்டு தொண்டு புரியும்படி ஏற்பட்ட உன் ஈன ஸ்திதியைப் பார்க்கும்படி வந்துவிட்டது. என்ன வஞ்சனையடி ராஜாவுக்கு? நாளைக்கு ராமனுக்கு யுவராஜ பட்டாபிஷேகமாம். ஊரெல்லாம் உல்லோல கல்லோலப்படுகிறது. உனக்குத் தெரியாமலே இப்படியெல்லாம் நடக்கின்றது. பரதனோ தூரதேசத்தில் இருக்கிறான். நினைக்க நினைக்கத் திகிலுண்டாகிறது" என்றாள் கூனி. கைகேயி ஸ்ரீ ராமனுக்குப் பட்டாபிஷேகம் என்ற வார்த்தையைக் கேட்டதும் பூர்ணிமை யிரவுபோல் பொலிவுற்றுப் பூரித்து குதித்தெழுந்து நின்றாள். "அடி மந்தரே! எனக்கு மெத்தவும் மகிழ்ச்சியை விளைவிக்கின்றாய். என் ராமனுக்குப் பட்டாபிஷேகமா? கல்யாண சீலனான என் காகுஸ்தனுக் கபிஷேகமா? தமால ச்யாமளனான என் தனயனுக் கபிஷேகமா? ரகுகுலதிலகனான என் ராகவனுக்கபிஷேகமா? மைதிலியின் காந்தனான என் மன்னனுக்கபிஷேகமா? இப்பொழுதுதான் மகாராஜாவினிடத்தில் எனக்குப் பூர்ணமான விசுவாசம். என் குழந்தை ராமனுக்குக் கல்யா

ணங்களைத் தருகின்றனரே! பரதனைக் காட்டிலும் ராமனே என்னிடத்தில் விசேஷமான பக்தி யுள்ளவன். இந்த சந்தோஷ சமாசாரம் கொண்டுவந்த உனக்குத் தகுந்த கைம்மாறு என்ன நான் செய்யப் போகிறேன். இப்பொழுது இதை அணிந்து கொள். என் பரதன் வந்ததும் அவனைக் கொண்டு இன்னும் அதிகமாய் உனக்கு சம்மானங்கள் செய்விக்கிறேன்" என்று சொல்லி விலையிலாத ஒரு நவரத்தின மாலையைக் கழற்றி அவள் கரத்தில் இட்டாள். மந்தரைக்கு வந்த கோபத்துக்கு அளவு சங்கியை இல்லை. கைகேயியை கோணல் பார்வையாய்ப் பார்த்தாள். ரத்தின ஹாரத்தைக் கழற்றி எறிந்தாள். "அடி முட்டாளே! ஆழ்ந்த படுகுழியில் விழுந்தும் என்ன சந்தோஷமடி உனக்கு? உன்னைப் பார்த்தால் ஒரு பக்கத்தில் ஆராத துயரமும் மற்றொரு பக்கத்தில் சிரிப்பும் வருகிறது. சக்களத்தியின் பிள்ளைக்குச் சாம்ராஜ்யம் கிடைப்பதைப் பற்றி களிக்கின்றனை. என்ன புத்தி ஹீனையாயிருக்கின்றாய். ஸ்ரீராமன் ராஜ்யத்துக்கு வந்தால் பரதன் சங்கதி பூஜ்யம்தான். பரதனுக்குக் கெடுதியை ராமன் நிச்சயமாய் நினைப்பான். லக்ஷ்மணன் ராமனுக்கு உயிர்த்துணைவனாகலின் அவனைப் பற்றியும் அந்த லக்ஷ்மணனுக்குத் தம்பி யாதலினால் சத்துருக்கனனைப் பற்றியும் பயமில்லை. ராமனுக்கு அடுத்தபடியில் பரதன் இருப்பதால் ராஜ்ய விஷயத்தில் பரதனிடத்தில்தான் ராமனுக்குச் சங்கை ஏற்படும். ஸ்வபாவத்தில் ராமன் நல்லவன் என்றாலும் உன்னிடத்தில் நீடித்த விரோதமுள்ள தாயின் போதனையினாலாவது மந்திரிகளின் தந்திரங்களினாலாவது பரதனிடத்தில் கொடிய எண்ணங்கள் உண்டாகக் கூடும். அது போகட்டும். நானைக்குப் பட்டாபிஷேகமானதும் கௌஸல்யையைக் கிட்டி கை கட்டி வாய் பொத்தி நின்று எல்

லோரும்போல நீயும் அவளுக்கு பணிவிடை செய்யவேண்டுமே? உனக்குத்தான் தலையில் எழுத்து. நானும்கூட அவளுக்குத் தொண்டு புரியும்படி வருமே” என்று சொல்லிவரும் கூனியைத் தடுத்துக் கைகேயி, “என்னடி. ஆகாசத்தில் கோட்டை கட்டுகிறாய். அச்சில்லாமல் தேரோட்டுகிறாய். என் தாசரதியினுடைய கல்யாண குணங்களையெல்லாம் நீ அறியமாட்டாய். அவன் தர்மத்தின் குடி வீடு, சத்யத்தின் சார்பிடமானவன், கருணையின் கடல், பொறுமையின் பொக்கிஷம், மகா பரிசுத்தமான மன நிலமை கொண்டவன். இந்த குணங்களுடன் மூத்தபிள்ளையாயும் இருக்கின்றான். நியாயப்படி ராஜ்யம் அவனுடையதே. என் துக்கப்படுகிறாய்? எதற்காகக் கண்டபடியெல்லாம் கல்பனைகளைக் கட்டிக் கொண்டு வாயில் வந்தபடியெல்லாம் பிதற்றுகிறாய். போதும் நிறுத்து. நான் இவைகளைக் காது கொடுத்துக் கேட்கவேமாட்டேன்” என்று அவளை அடக்கினாள். மந்தரையோ பெரு மூச்சுவிட்டாள். “அடி கைகேயி! ஒன்றும் தெரியாதவளாய் இப்படி நீ ஒருத்தி பிறக்கவேண்டுமா? ராஜ்யத்தில் ஒரு சம்பந்தமுமில்லாமல் அநாதைப் குழந்தை பரதனைத் தெருவில் விடப் பார்க்கின்றாய். வரப்போகிற விபத்தை ஆலோசித்தாயில்லை. கண்மணி பரதனை உயிருடன் காண்பதே அரிதாய் விடுமடி. ஆயுள் உள்ள வரையில் சூரிய கிரணம் பிரவேசிக்காத இடத்தில் அவனை அடைத்து விடுவார்கள். அல்லது என்ன செய்வார்களோ? நினைக்கவே ரொம்பவும் பயங்கரமாயிருக்கிறது” என்று இவ்வாறெல்லாம் கைகேயிக்கு எடுத்துரைத்தாள். அடிமேலடி அடித்தால் அம்மியும் கரையுமென்பார்கள். இந்த போதனைகளால் கைகேயியின் நிர்மலமான மனது கலக்கங் கொண்டது. விதியின் சூழ்ச்சியால் மந்தரை

பின் யோசனையெல்லாம் சரியானதென்று எண்ணினாள். பரதன் விஷயமாய் விசேஷமான கவலையையும் திகிலையும் அடைந்தாள். மந்தரையும் சமயம் வாய்த்ததென்று தேவாசுர யுத்தத்தில் மகேந்திரனுக்காகத் தசரத சக்ரவர்த்தி ஸஹாயமாய்ச் சென்றதையும், அக்காலத்தில் சாரத்யம் செய்து அபாயத்தினின்று கைகேயி மகாராஜாவை மீட்டதையும், இந்த உதவிக்காக எப்பொழுது கேட்டாலும் தருகிறேனென்று இரண்டு வரன்களை மகாராஜா இவளுக்குத் தந்ததையும் கைகேயிக்கு ஞாபகப்படுத்தினாள். இவள் அழகில் மயங்கி நிற்கும் மகாராஜனிடம் கோபாகாரம் சென்று சாகசம் செய்வதால் ஒரு வரத்தினால் ராமனுக்குப் பதினான்கு வருஷங்கள் வனவாசத்தையும் மற்றொரு வரத்தினால் பரதனுக்குப் பட்டாபிஷேகத்தையும் சுலபமாய்ச் சம்பாதித்து விடலாமென்றும் செம்மையாய்ப் புகட்டிவிட்டாள். கைகேயி ஆனந்தம் கொண்டவளாய் "சரியான உபாயம் சொன்னாய். சமயத்தில் உன்னைப் போல் யார் உதவுவார்கள்? எல்லோரும் கூனி, நீயும் கூனியா? விவகாரம் பிடித்தவர்களாய் கொடிய செயல்களுடன் கூனிகள் இருப்பார்கள். பெருங்காற்றில் அகப்பட்ட தாமரைக் கொடிபோல் துவண்டு வளைந்து வளைந்து தண்ணுக்கு எவ்வளவு அழகாய்க் காணப்படுகிறாய். உனது மார்போ தோளிற்கு மேலாக எழும்பி நின்று உனது பெருமையை எடுத்துக் காட்டுகின்றது. இடையோ லஜ்ஜையால் வெகுதூரம் பின்னடைந்திருக்கின்றது. பல முகமும் பார்க்கும் உனது முகம் எவ்வளவு எடுப்பாய் இருக்கின்றது! அந்த ஒட்டியாணம் உனக்கே அழகு தருகின்றது. உன்னை எப்படி வர்ணிப்பேனடி. பரதனுக்குப் பட்டாபிஷேகம் ஆகட்டும். உன்னை என்னைப்போல் ராஜாத்தி யாக்கிவிடுகிறேன்" என்று கூனியைப் புகழ்ந்தாள். "அடி மந்தரே!

இந்தக் காரியம் பலிக்குமா! நமது மனோரதம் ஈடேறுமா? ராமன் கானகம் புகுந்தாலன்றி எனக்கு ஒன்றும் தோன்றாதடி. எனக்குக் கட்டிலென்ன! படுக்கை யென்ன! சந்தனமென்ன! தாம்பூலமென்ன! ஒன்றும் வேண்டாமடி" என்று சொல்லிக்கொண்டே ஆபரணங்களை யெல்லாம் களைந்தாள். கடுங்கோபத்துடன் கோபாகாரம் சென்று புழுதியில் படுத்தாள். யாரையும் கடுகடுத்தாள். தனது நல்ல தன்மையையெல்லாம் விடுத்தாள். கைகேயி, கைகேயி என்று எல்லோரும் கோபகாலங்களில் ஸ்திரீகளைத் தன் பெயரால் ஏசும்படி பெயரெடுத்தாள். தேவலோகம் மகிழ்ந்தது. இந்தக் கைகேயியின் அந்தராத்மாவாய் நின்று அவளை இப்படி ஆட்டிவைக்கும் ஸ்ரீகாந்தனுக்கு யோகிகள் மங்களம் வாழ்த்தினார்கள்.

ப. கி. கல்யாணராமசாஸ்த்ரி.

ஸ்ரீராமாயணமென்னும் ஒரு சிறந்த ஔஷதம்.

இப்பூவுலகில் அறியாதவர்களும், அளவாய்க் கற்றவர்களும் அமிதமாய் அறிந்தோர்களும் வியாதியின் துன்பத்தை நீக்கிக்கொள்ள வைத்தியனுக்குத் தேவையான பணத்தைக் கொடுத்து, அவனால் கொடுக்கப்பட்ட மருந்தை ஒரு மண்டலம் அரை மண்டலம் கால் மண்டலமென்னும் காலவளவில் உபயோகித்து, அதினால் கொஞ்சமும் குணமடையாமல் மற்றொரு சிகித்ஸைகளைத்

தேடுகிறார்கள். அவனும் தன்னுடைய தெரியாத் தன்மையை ஒத்துக் கொள்ளாமல், ரோகத்தை நீக்குவதற்கு நான் ஈச்வரனென்று சொல்லித் தப்பித்தோடி விடுகிறான். இம்மாதிரி ஐந்தாறு அல்லது ஏழு எட்டு வைத்யர்களைப் பார்த்துக் கடைசியாக ஸ்வாமியிருக்கிறார் என்று, ஸூர்ய நமஸ்காரம், நவக்ரஹ ஹோமம், ஸர்வாரிஷ்ட சாந்தி, ஆயுஷ்ய ஹோமம் முதலானவற்றைச் செய்ய ஆரம்பிக்கிறார்கள்.

ஸ்மிருதியில் 'तच्छान्तिरौषधैर्दानैर्जपहोमार्चनादिभिः' என்றிருக்கிறபடியால் முதலில் குறிப்பிட்ட ஔஷத ஸேவனத்தை எவ்விதத்திலும் தடுக்க வழியில்லாததால் அதைச் செய்ய வேண்டியதாகவே ஒத்துக்கொள்வோம்.

'इष्टजनैः सह भुक्तं भुक्तम्' உறவினர்களுடன் உண்டதே உணவு என்பது போல் சொந்த அனுபோகத்திலிருந்த சுகத்தைத் தந்ததும், ஸர்வ வியாதிகளையும் நீக்கக் கூடியதும் அதைக் காட்டிலும் வேறொன்றில்லாததான ஓர் ஔஷதத்தைச் சிநேகிதர்களிடத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இது பண்டிதர்களுக்குத் தெரிந்த விஷயமாயிருப்பின் அவர்களுக்குச் சொல்ல வரவில்லை. அதைப் பற்றி அவர்கள் கலக்கமுறாதிருக்க வேண்டுகிறேன்.

வைத்யனிடத்தில் ஏராளமாய்த் திரவ்யத்தைக் கொடுத்துச் சிகித்ஸை புரியச் செய்வதால், அனுகூலம் ஏற்படுகிறதோ இல்லையோ என்கிற சந்தேகம் முதலில். அப்படி ரோக நிவர்த்தியானாலும் மிகுந்த பணச் செலவுடன் ஆத்மாவுக்கு அசுத்தியும் ஏற்படுகிறது. இவ்வித கஷ்டத்தில் வியாதி நீங்கிவிட்டதென்று அதிக சந்தோஷத்தையுமடைகிறோம்.

நாம் முக்கியமாய் வேண்டுகிறது பிணியில்லாதிருத்தலே. அது, வைத்தியனில்லாமலும் செலவில்லாமலும்,

சரீர அசுத்தியில்லாமலும் ஏதாவது ஓர் உபாயத்தால் சித்தித்தால் யார் அதைத் தடுப்பார்? இம்மருந்தை உபயோகிப்பதால், இதைச் சார்ந்த பரலோகபலமும் ஆசைப்படாமலே உண்டாகிறது. ஆ! அவ்வித ஆச்சரியம் இன்னதென்று அறிஞர்களுக்குத் தெரிவிக்கிறேன்.—

சென்ற ராக்ஷஸ வருஷத்தில் ஒருவர் ஒரு மஹாரோகத்தால் பீடையை யடைந்து அநேக வைத்தியர்களின் வீடுகளை நாடி, அவர்களைக் கண்டு, அவ்வூரில் வசித்து, மருந்துகளைத் தின்று, அதனால் நாட்களைக் கழித்துத் தாம் பட்ட சிரமங்களை வீணாகவெண்ணி, இந்த ரோக நிராகரணத்தில் வைத்யர்கள் திறைமைபற்றவர்கள் என்று எண்ணித் தன் வீட்டை நோக்கித் திரும்பினார். நடுவழியிற் கண்ட ஒரு வித்வானிடத்தில் தம் சமாசாரம் முழுவதையும் தெரிவித்தார். அதைக்கேட்ட அப்பரமகாருணிகரும் இரக்கங்கொண்டு ஓர் உபாயத்தைச் சொன்னார்.

"ஓய் பிராம்மணோத்தம, கவி குஞ்சரனான ஸ்ரீவால்மீகி மஹர்ஷியால் இயற்றப்பட்ட ஸ்ரீ ராமாயணமானது, படிப்போர்களுக்கும் கேட்போர்களுக்கும் தேனினும், பாலினும் சிறந்த திகட்டாச் சுவை யுள்ளதாயிருக்கிறது. அதைப் படித்து வந்தால் மிகக் குரூரமான பிணிகளும் பறந்தோடி விடுகின்றனவென்றால், உம்முடைய ரோகம் நசிக்கச் சந்தேகமேது? கிடையாது. பண்டிதர்களும், பாமரர்கள்போல் அதன் மஹிமையை அறியாதவர்களாய்ச் சோம்பலையே நாடுகின்றார்கள். அதிகமாய் எழுதுவதிற் பயனென்ன? முன்னோர்கள் சொன்ன ரீதியாய் ஒருவன் வணக்கத்தோடு ஸங்கல்ப புரஸ்ஸரமாய் இருபத்து ஏழு நாட்களில் ஸ்ரீ ராமாயணத்தினுடைய ஆறு காண்டங்களையும் பக்தியுக்தனாய்ப் படிப்பானேயாகில் ஸர்வவியாதிகளில் நின்றும் நீங்கி இஷ்டப் பிராப்தியையுடைகிறான்.

மகர்ஷிகளும் இவ்வாறு கூறுகிறார்கள்.

'आयुष्यमारोग्यकरम्'

'सर्वपापैः प्रमुच्येत पादमप्यस्य यः पठेत्'

'एतदाख्यानमायुष्यं पठन्रामायणं नरः'

'सपुत्रपौत्रो लोकेऽस्मिन्प्रेत्य चेह महीयते'

இதனால் பரலோக பலமும் ஸித்திக்கிறது. ராமாயண படனச் சிரவணங்களுக்குப் பலமானது ஸ்காந்த புராணத்திலுள்ள ராமாயண மாகாத்மியத்தில் விரிவாய்ச் சொல்லப்படுகின்றது.

இஹத்தில் பயனை விரும்புவோர்கட்குப் பூர்வத்திலுள்ள முனிகளால் கீழ்க் குறிப்பிட்டவாறு, க-ட-ப யாதி ஸங்கியைகளால் சொல்லப்பட்டிருக்கிறது.

'श्रीरा दारस्सत्रा णैका धीपा धेयः पत्रा लेखः । स्फारा भारा मोरा तिश्री धार्यो नाम्नो हारा लापः ॥

पुत्रा हेया क्षेपः श्रीकः च्छाया सुख्यः पायात्प्रायः । स्थेया हार्यं च्छायो ह्येवं नक्षत्राभिषेकः कार्यः ॥ बालारण्यानीकिष्किन्धाकाण्डास्त्रिभिस्त्रिभिरहोभिः । षड्भिरयोध्याकाण्डश्चतुरष्टाभिः सुन्दरः समरः ।

இதை அநுசரித்து நீர் படித்துவந்தால் உம்முடைய ரோகம் நீங்கிவிடும்" என்று சொன்னார். அவ்விதமே பாராயணஞ்செய்து ராமப் பிரஸாதத்தால் ஸ்வஸ்த சரீரமுள்ளவராக இப்பொழுது ஒரு கலாசாலையில் ஸம்ஸ்கிருத பண்டிதராக இருந்து வருகிறார். "ஆகையால் ராமாயணம் ஒரு சிறந்த, ஔஷதமே?

ஸ்ரீ ராமாயணத்தைப் பலாகாங்க்ஷிகள் பாராயணம் செய்யவேண்டிய நியமம்—

லக்கம்	காண்டங்கள்	நாட்கள்	ஸர்க்கக்கிரமம்.
1	பாலகாண்டம்	3	22+28+27=77
2	அயோத்தியா காண்டம்	6	15+19+19+21+23+22 =119

3	ஆரண்ய காண்டம்	3	24+25+26=75
4	கிஷ்கிந்தா காண்டம்	3	19+20+28=67
5	ஸுந்தர காண்டம்	4	13+21+18+16=68
6	யுத்த காண்டம்	8	12+17+27+11+12+17+18+17=131

இவ்விதம் ஆறு காண்டங்களையும் இருபத்தேழு நாட்களிற் பாராயணம் செய்யலாம்.

வி. உமாமஹேசுவர சரஸ்திரி.

"சந்தியாவந்தனம்"

ஆரியதேசத்திலேயே பிறந்து ஆரியருடனே கலந்து வளர்ந்து ஜனனமுதல் ஆரியமதத்தை முறை பிறழாது பயின்று அதிகமான நாவலிமையையும் அற்புதச்சக்தியையும் மகாதவத்தையும் பெற்று அவதாரபுருஷர்களென மதிக்கத்தகும் மகான்களான அந்தணர் மணிகளின் குலத்துதித்து, மந்திரபூர்வகமாகவே கூறப்பட்டுள்ள நிஷேகமுதலிய ஸம்ஸ்காரங்களைப்பெற்று வேதாதி பதினான்கு வித்தியாஸ்தானங்களைக்கற்று, அவைகளிற் கூறப்பட்ட நன்னெறியைக் கைப்பற்றி நல்லோராகிய மூதறிஞர் சென்ற நல்வழி நாடி நல்லோருடன்கூடி சுருதி ஸ்மிருதி புராணாதிகளிலும் அதற்கிசைந்த சதாசாரங்களிலும் பிராமாண்யத்தை வஹித்த நம்மவர்கட்குக் கர்மமே கற்பகமாம். காமங்களைக் கறக்கும் காமதேனுவாமென்பது யாவருமறிந்த விஷயமே. இதைத்தான் கீதாசிரியர்—

"एष वोऽस्त्विष्टकामधुक्"

என்றதனால் வெளியிட்டார். அத்தகைய கர்மங்கள் பல்வுள. அவற்றுள் முக்கியமாக அனுஷ்டிக்கவேண்டியது நித்திய கர்மங்களாம். நித்தியநைமித்திக கர்மங்களுக்குப் பயனே இல்லை என்றும், அவைகளைச் செய்யாவிடி லுண்டாகும் தோஷத்தை பரிகரிக்க வேண்டியதற்காகவே அவைகளையனுஷ்டிக்கவேண்டுமென்றும் சிலர் கூறுகின்றனர். அது சரியன்று. சகலப் பிரவிருத்திகளுக்கும் கர்மபலகாமனையே காரணமாகின்றது என்பது

"इन्द्रियस्येन्द्रियस्यार्थे"

என்பதாதி வசனங்களால் வியக்தமாகின்றது. நித்திய கர்மங்களுக்குப் பயனேயில்லையென்றால் அக்காமனையுண்டாக வழியில்லை. ஆகவே அவைகளிலதிகாரியாயுள்ளவனுக்குப் பிரவிர்த்தியுண்டாகாது. அன்றியும்

"प्रयोजनमनुद्दिश्य न मन्दोऽपि प्रवर्तते"

பயனைக் கருதாமல் மூடனும் பிரவிர்த்திக்கமாட்டான் என்ற விஷயம் யாவருமுணர்ந்ததே. ஆகையால் நித்திய கர்மங்களில் பிரவிர்த்தியைப் போதிக்கின்ற வேதவாக்கியங்களுக்கு அப்பிராமாண்யமுமுண்டாகும். ஆதல்பற்றி நித்திய கர்மங்களுக்கு பயனில்லையென்பது பொருந்தாது.

"यथा आम्रे फलार्थे निर्मिते च्छायागन्धावनूत्पद्येते एवं धर्मं चर्यमाणमर्था अनूत्पद्यन्ते"

'ஒட்டுமாம்பழத்தை விரும்பி அதற்காக ஒட்டுமாங்கன்னைத் தோட்டத்திற் பயிரிட்டவனுக்கு அப்பழம் கிடைப்பதோடு நிழலும் மணமும் கூடவே உண்டாவதுபோல தர்மங்களையனுஷ்டித்தால் பயனுமுண்டாகின்றது' என்ற வசனத்தையனுஸரித்து பாஷ்யகாராள் நித்தியகர்மங்களுக்

கும் பயனுண்டு என்று சித்தாந்தஞ் செய்திருக்கிறார்கள். அன்றியும்—

"अनाश्रितः कर्मफलं कार्यं कर्म करोति यः"

என்ற கீதாவாக்கியத்தில் 'கர்மபலத்தை விரும்பாமல் அவசியம் செய்யவேண்டியதான கர்மத்தைச் செய்பவன்' என்று குறித்தமையால் நித்திய கர்மங்களுக்கும் பயனுண்டென்றேற்படுகின்றது. அவைகளுக்குப் பயனேயில்லையென்று கூறினால் 'அதனை விரும்பாமல்' என்ற வார்த்தையொட்டாது. ஆனலது காம்யகர்ம்மமாயிருக்கட்டுமே என்பது கூடாது. அப்படியானல் 'அவசியம் செய்யவேண்டியதான' என்ற கர்மத்தின் விசேஷணம் பொருந்தாது. ஆகையால் நித்திய கர்மங்களுக்கும் பயனுண்டென்பதே சித்தாந்தம், நித்திய கர்மங்களுக்கும் பயனுண்டாகில் அதினலேயே மோக்ஷமென்ற பரம புருஷார்த்தமும் உண்டாகுமெனசிலர் கூற்று. அதுவும் சரியன்று.

"न कमणा न प्रजया धनेन" "नान्यः पन्था विद्यतेऽयनाय"

என்பதாதிசுருதிவாக்கியங்களால் கர்மம் மோக்ஷசாதனமாகாது என்று ஏற்படுகின்றது. உபாஸ்தியின்றி செய்யப்படும் கர்ம்மங்களுக்கு பிதிருலோகமும் உபாஸ்தியுடன் செய்யப்படும். கர்மங்களுக்கு ப்ரம்மலோகமும் பயனாகிறது என்று—

"कर्मणा पितृलोकः विद्यया देवलोकः"

என்பதாதி வாக்கியம் போதிப்பதுபோல் கர்ம்மத்தினல் மோக்ஷம் கிடைக்குமென்று ஒரு வாக்கியமும் போதிக்கவில்லை. கர்மத்தினல் மோக்ஷமுண்டாகுமென்பது நியாயத்திற்கு பொருந்தாது. உண்டாவதெல்லாமழியுமென்றல்லவா நியாயசித்தம். மோக்ஷமுமொரு ஸாதனத்தாலுண்டாகுமேயானல் அழிந்துவிடும், அதனை நித்திய

மென யாவருமங்கீகரித்த விஷயம். ஆகையால் கர்மத்தினுல் மோக்ஷமுண்டாகாது. ஆனுல் கர்மம் மோக்ஷத்தில் ஒருவிதமான உபயோகத்தையும் பெறுவதில்லேயோ. பெறுவதில்லேயென்றுல் உத்தம புருஷார்த்தத்திலுபயோகப்படாத ஸாதனத்திலாவதென்னவென்று கர்மத்தில் வெறுப்புண்டாய் விடுமேயென்றுல் கூறுவாம். கர்மம் மோக்ஷத்திற்கு உபயோகப்படுவதே இல்லையென்று சொல்லவில்லே. மோக்ஷத்திற்கு ஸாக்ஷாத்தாளஸாதனமாகாதென்றுதான் கூறுகின்றேம். பரம்பரையாக கர்மம் மோக்ஷத்திற்கு ஸாதநந்தான். ஞானேற்பத்திக்கு ப்ரதிபந்தகமான பாபாதிகளேயும் காமாதிகளேயும் அகற்றி மனதைச் சுத்திசெய்து அந்த வாயிலாக பரம்பரையாய் மோக்ஷத்தில் கர்மம் உபயோகப்படுகின்றது. அத்தகைய கர்மங்களுள் ஸந்தியாவந்தனம் என்றது ஓர் சிறந்த நித்திய கர்மமாகும்.

1. அது அவசியம் செய்யவேண்டியது. செய்தால் இம்மைப்பயனும் மறுமைப்பயனுமுண்டாகின்றது. அதாவது—

“ ऋषयो दीर्घसन्ध्यत्वाद्दीर्घमायुरवाप्नुयुः
प्रज्ञां यशश्च कीर्त्तिं च ब्रह्मवर्चसमेव च ”

என்ற வசனத்தினுல் தீர்க்காயுஸும், புத்திசக்தியும், யசஸ்ஸும், கீர்த்தியும், ப்ரம்ம தேஜஸ்ஸும் திருஷ்டபலம் ஸந்தியாகர்மத்தாலுண்டாகின்றது.

“ सन्ध्यामुपासते ये तु सततं संशितव्रताः
विधूतपापास्ते यान्ति ब्रह्मलोकं सनातनम् ”

என்பதாதி வசனங்களால் அதிருஷ்டமான ப்ரம்மாதிலோக ப்ராப்தியென்ற மறுமைப்பயனுண்டாகின்றது. அன்றியும் இதைச் செய்யாவிட்டால் மகா பாபம் ஸம்பவிக்

கின்றதாக அநேக வசனங்கள் கூறுகின்றன. ஆகையால் அவசியமிது செய்யத்தக்கது.

2. இது மூன்று ஸந்தியைகளிலும் செய்யவேண்டியது. அதாவது காலையிலும், மத்தியான்னத்திலும், மாலையிலும் செய்யவேண்டியது.

3. அச்சமயங்களிலும் குறிப்பிட்ட நாழிகையில் செய்யவேண்டியது. அந்தக்காலம் தவறக்கூடாது. காலந் தப்பிச் செய்யும் காரியங்களுக்குச் சரியான பயனில்லையென்பது லோகானுபவ சித்தமாகையாலதனை யிங்கு விரிக்கவேண்டாம்.

4. ஒவ்வொரு ஸந்தியைக்கும் முக்கிய காலமென்றும் கௌணகாலமென்றுமிரண்டு காலமுண்டு. அவற்றுள் முக்கியகாலம் ஓரேவிதந்தான். கௌணகாலம் மத்தியமகாலமென்றும் அதமகாலமென்றுமிரண்டு வகைத்தாகும். இவைகளில் முக்கிய காலத்தில் அனுஷ்டிப்பது தான் சிறந்தது. அநேக அஸௌகரியங்களால் முக்கிய காலத்தில் செய்யத் தவறிவிட்டால் மத்தியமகால மதிக்கிரமிக்காமல் அனுஷ்டிக்கவேண்டும். அதிலுமனுஷ்டிக்க முடியாத ஆபத்து நேர்ந்துவிட்டால் அதமகாலத்தில் கட்டாயம் செய்துவிடவேண்டியது. இங்ஙனமிருக்க ஒரு காரியமுமின்றி சோம்பேரித்தனத்தாலோ நாஸ்திக்கியத்தாலோ செய்யாமல் விட்டவர்கள் பாபத்திற்குள்ளாவார்கள். வேறு தர்ம காரியத்தில் முயன்றிருந்து அனுஷ்டிக்கத் தவரிவிட்டாலுமிப்படித்தானோவென்றால். இப்படித்தான்

“ योऽन्यत्र कुरुते यत्नं धर्मकार्येऽपि वै द्विजः

“ विहाय सन्ध्याप्रणतिं स याति नरकायुतम् ”

ஸந்தியாவந்தன காலத்தில் அதை யனுஷ்டிக்காமல் வேறு தர்மகாரியமானாலும் அதில் முயல்வானாகில் பதினாயிரம்

நரகத்தையடைவான் என்று கூறியிருப்பதால் அக்காலத்தில் வேறு ஒரு காரியமுமனுஷ்டிப்பது கூடாது.

5. காலையில் செய்யும் ஸந்தியைக்குக் காலமிவ்வாறாகக் கூறப்படுகின்றது. சூரியோதயத்திற்கு இரண்டு நாழிகைக்குமுன் நக்ஷத்திரங்களின் ஒளி நன்றாயிருக்கும் பொழுது ஆரம்பித்து சூரிய பிம்பத்தின் ரேகை காணப்படுங்காலம்வரையுள்ள இரண்டு நாழிகை பிராதக் காலஸந்திக்கு முக்கிய காலமாம்.

"रात्र्यन्तयामनाडीदो सन्ध्याकाल उदीरितः
दर्शनाद्रविरेखायास्तदन्तो मुनिभिः स्मृतः"

என்பதாதிவசனங்களால் இப்பொருள் வெளியாகின்றது. அசக்தர்கள் விஷயத்திலும் ராஜ்ய க்ஷோபாதிகளுண்டான காலத்திலும் கௌணகாலம் ஸ்மிருதிகளில் விதிக்கப்பட்டிருக்கின்றது.

6. மத்தியமகாலம், அதமகாலமென்று கௌணகாலமிருவகைத்தென்றோம். அவற்றுள் மத்தியம காலமென்பது நக்ஷத்திரங்களின் ஒளி முற்றிலும் குறைந்துபோகுங் காலமாம். அதமகாலமென்பது சூரியனுதித்து ஒரு நாழிகை பரியந்தமாகும். இந்தக் காலம் பரமாபத்து நேர்ந்த ஸமயத்திலென்றோம். ஆகையாலிக்காலத்தை யெப்பொழுதுங் கொள்ளக்கூடாது. அப்படிக் கொண்டால் அவ்விதமனுஷ்டிக்கப்பட்ட சந்தியை ஸந்தியையாகவேமாட்டாது.

"यः सूर्यसहितां सन्ध्यां सदा कुर्वीत मोहतः।
न तस्य विद्यते सन्ध्या सर्वकर्मबहिष्कृतः।
विधिनापि कृता सन्ध्या कालातीताफला भवेत्।"

"யாவனொருவன் மோஹத்தால் எப்பொழுதுமே ஸூரியோதயத்திற்குப் பிறகு ஸந்தியாவந்தனத்தைச் செய்கின்

ருனே அவனுற் செய்யப்பட்ட அது ஸந்தியாவந்தனமாகவே மாட்டாது. அவன் ஸகல கர்ம்மாதிகாரத்தினின்றும் வெளிப்படுவான். விதிப்படி செய்யப்படினும் காலந் தப்பி செய்யப்பட்டால் அந்த ஸந்தியை பயனற்றதாகவே ஆய்விடும்" என்பதாதிவசனங்கள் இக்கருத்தையே வெளியிடுகின்றன. இவ்விதமே ஸாயங்கால ஸந்தியிலும் முக்கிய காலம் முதலியவை காண்க. அதாவது சூரியன் மலைவாயில் நிற்பது நமக்குத் தெரியும்படியான காலம் முக்கிய காலமாகும். சூரியன் மறைந்தபின் நக்ஷத்திரங்கள் பிரகாசிக்கு முன்னுள்ள காலம் மத்தியம காலம். நக்ஷத்திரங்களின் ஒளி நன்றாய்த் தெரிய ஆரம்பித்தது முதல் ஒரு நாழிகை வரை அதமகாலம். இதுவும் பரமாபத்து நேர்ந்தபொழுதுதான். நித்தியமாக இந்தக் காலம் கூடாது. மத்தியான்ன கால ஸந்திக்கு மிங்ஙனமே மூன்று காலமுண்டு. ஸங்கவ காலத்திற்குப் பிறகு அபரான்ன காலத்திற்கு முந்தியுள்ள காலம் மத்தியான ஸந்தியைக்கு முக்கிய காலமாகும். அதற்கு முந்தியும் பிந்தியும் கௌணகாலமாம். அதமமான கௌணகாலங்களிலும் ஸந்தியாவந்தனத்தைச் செய்யாவிடில் மஹாதோஷம் சாஸ்திரத்திற் கூறப்படுகின்றது.

7. ஸந்தியாவந்தனத்தை காலத்தில் செய்யாதவன் ஆயுள் குறைவு முதலிய கெட்ட பயன்களை அனுபவிப்பதோடு ஸூரியஹத்தியென்ற தோஷத்தையும் அடைகின்ருன். ஸூரியன் மோக்ஷத்துவாரமென்று சாஸ்திரங்களிற் கூறப்படுகின்ருன். அந்த ஸூரியஹத்தியை செய்தவன் யாங்ஙனம் மோக்ஷம் பெறுவான். அன்றியும் ஸூரிய தேவனை உதயகாலத்திலும் ஸாயங்காலத்திலும் மந்தேஹாள் என்ற ராக்ஷஸர்கள் எதிர்த்து யுத்தஞ்செய்கின்ருர்கள். அதற்காக வைதிக மதத்தைக் கைப்பற்றிய அந்தணர் மணிகள் காயத்திரீயால் மந்திரிக்கப்பட்ட தீர்த்தத்தை

காலையில் கிழக்கு முகமாக நின்றுகொண்டு ஜலத்திலும் மாலையில் மேற்கு முகமாக கறையின்மீது உட்கார்ந்து கொண்டு கரையிலும் விடவேண்டியது. அங்ஙனம் விடப்பட்ட தீர்த்தம வஜ்ராயுதம் மாதிரியாகி அந்த அரக்கர்களை ஓர் தீவில் வாரி யெறிகின்றது. அங்ஙனம் அர்க்கிய தானம் செய்தால் சூரியதேவன் அரக்கர் பாதையினின்று விடுபட்டு நம்மைக் காப்பாற்றுவார். அதைச் செய்யாவிடில் ஸூரிஹத்தி வருமென்பதிற்றடையில்லை. ஆகையால் ஸந்தியாவந்தனத்தை குறிப்பிட்ட காலத்தில் அவசியம் செய்யவேண்டும். இவ்வளவால் ஸந்தியையென்னும் பதத்தின் முக்கியார்த்தமான ஸந்தியானுஷ்டான காலம் கூறப்பட்டது. ஸந்தியாவென்ற சப்தத்திற்கு லக்ஷணையாய் அக்காலத்திற் செய்யப்படும் கர்மமும், உபாஸிக்கப்படும் தேவதையும் பொருளாகும்.

"संध्यात्रयं तु कर्तव्यम्"

'संध्या स्नानं जपो होमो देवतानां च पूजनम् ।
आतिथ्यं वैश्वदेवं च षट् कर्माणि दिने दिने'

என்பதாதி வசனங்களில் 'ஸந்தியையைச் செய்யவேண்டியது' 'ஸந்தியை முதலியன ஆறும் நித்திய கர்மங்களாம்' என்று கூறியிருப்பதால் ஸந்தியையென்ற பதத்திற்கு கர்மம் என்று பொருள் ஏற்படுகின்றது. தேவதையாயிருந்தாலும் காலமாயிருந்தாலும் செய்யத்தக்கதாகமாட்டாது.

'सा तु संध्या समाख्याता'

என்ற ஸ்மிருதி வசனங்களாலும்,

'प्राह्णापराह्णमध्याह्नास्त्रिसंध्यम्' 'सायंसंध्या पितृप्रसूः'

என்பதாதி நிகண்டு வசனங்களாலும் ஸந்தியாசப்தத்திற்கு முக்கியார்த்தம் காலமென்றேற்படுகின்றது. கர்மமோ தேவதையோ முக்கியார்த்தமாயிருக்கட்டும். காலம் லக்ஷணையால் போதிக்கப்படட்டுமேயென்று நினைக்கக்கூடாது.

'यद्यपि कालवाचकत्वेनात्र संध्याशब्दः प्रतीयते तथापि तस्मिन्काल उपास्या देवता संध्याशब्देनोपलक्ष्यते'

என்று வைத்தியநாத தீக்ஷிதரவர்கள் காலத்தையே ஸந்தியா சப்தத்திற்கு முக்கியார்த்தமாகவும் தேவதை முதலியவைகளை லக்ஷியார்த்தமாகவும் கூறியிருக்கின்றார். ஆகையால், காலந்தான் முக்கியார்த்தம். அது கூறப்பட்டது. தேவதையும் கர்ம்மமும் ஸந்தியா சப்தத்திற்கு லக்ஷியார்த்தமாகும். அவற்றுள் கர்மத்தைச் செய்யும் முறை ஆரியதர்மத்தில் ஆன்ஹிகச்சுருக்கம் என்ற விஷயத்திற் காணலாம். தேவதையென்பது ஸூரியமண்டலத்தினுள்ளே வஸிக்கும் ஸவிதாவென்பவரேயாம்.

'उदये ब्रह्मरूपं तु मध्याह्ने तु महेश्वरम् ।
सायाह्ने विष्णुरूपं तु त्रिरूपं वै दिवाकरम् ॥
अनुसंध्यमुपासीत संध्यारूपं रविं द्विजः'

என்பதாதி வசனங்களின் பொருளை யனுசரித்து தீக்ஷிதரவர்கள்,

'एवं च संध्यामुपासीतेत्यनेन संध्यामुक्तरूपामर्कमण्डलान्तर्गतामादित्याख्यां ब्रह्मात्मिकां देवतां हृदि साहमस्मीत्युपासीत ध्यायेदित्युक्तं भवति'

என்ற வாக்கியத்தால் ஸூரியதேவதைதான் ஸந்தியா தேவதையெனப்படுகின்றது. மூன்றுகாலங்களிலும் அவர் மும்மூர்த்தியாகவும் காயத்திரீ ஸாவித்திரீ ஸ்ரஸ்வதியென்ற திருநாமங்களை தரித்தும் விளங்குகின்றார். இந்த தேவதாத்தியானந்தான் முக்கியமான பிரதான கர்ம்மம். புரோக்ஷணம் முதலியவை அங்கங்களென்று சிலவிடத்தும் வேறு சிலவிடத்து தியானம் அர்க்கியதானம் காயத்திரீஜபம் மூன்றும் பிரதானம் மற்றவை அங்கமென்றும் கூறப்படுகின்றது. இத்தகைய புண்ணியகர்ம்மத்தை யாவருமனுஷ்டித்து சிரேயஸ்ஸை யடைவார்களாக.

கிருகஸ்த தர்மச் சுருக்கம்.

நான்குவிதமான ஆசிரமங்களுக்குள் கிருகஸ்தாசிரமமென்பது ஒன்று. இதை யடையவேண்டுமானால் முதலாவதான பிரமசர்யாசிரமத்தைப் பெற்று தீதிலிருந்து இதற்கு வரவேண்டும். ஆனால் பிரமசர்யமென்கிற முதலாவது ஆசிரமத்தை அவசியமடைய வேண்டுமென்றும் அவ்விதமடையாவிட்டால் அவன்பதிதன். அவனுடன் பேசுவது சாப்பிடுவது முதலியவைகள் கூடாதென்றும் சாஸ்திரங்கள் எப்படி வற்புருத்துகின்றனவோ அவ்விதம் கிருகஸ்தாசிரமத்தை யடையாவிட்டால் அதைத் தோஷமாகக் கூறவில்லை. திண்ணமான வைராக்கியமும் ஞானமுமிருக்குமாகில் குருகுல வாசம் செய்து கொண்டு பிரமசர்யத்தில் தன் ஆயுள் முழுமையுமிருக்கலாம். அவ்வண்ணம் சரியான நியமப்படி தவராமலிருப்பவர்களுக்கு மேலான லோகம் நிச்சமயமாகக் கிடைக்குமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இதினிலும் மிக்க வைராக்கியமிருக்குமேயாகில் சந்நியாஸமென்கிற நான்காவதாசிரமத்திற்கு வருகலாம் இதினின்று நற்கதி பெறலாம். ஆனால் இந்த ஆசிரமங்களுக்குச் சாஸ்திரங்களாலும் உலகத்தாலும் விசேஷமான மகிமை கூறப்பட்டிருக்கின்றனவென்று நினைத்து அதற்குறிய சரியான சாதனமற்றவர்கள் பெருமையை மாத்திரம் பெரியதாகக் கருதி லோபத்தால் அதை யடைந்தார்களேயாகில் 'मिथ्याचारः स उच्यते' என்று கீதையில் ஸ்ரீ கிருஷ்ணபிரான் கூறியவண்ணம் அவர்கள் இவ்வுலகத்தை வஞ்சிப்பதற்காக கபடமான ஆசாரமுடை-

யவர்களாகின்றார்கள். அதினால் அவர்களுக்கு இப்புவியில் கொடிய அபவாதமும் பரலோகமேன்மைக்கு நாசமும் ஏற்பட்டு நரகத்திற்கும் ஆளாய்விடுகின்றார்கள். இவ்விதம் நியாயமாய்ப் பிரமசர்யாசிரமத்தையோ அதிலிருந்தும் மிகச் சிறந்ததான சந்நியாசாசிரமத்தையோ அடைய அதிகாரமில்லாதவர்களாயும் இக சுகத்தில் விருப்பமுள்ளவர்களாயுமிருக்கும் ஜனங்களுக்கு இரண்டாவதான கிருகஸ்தாசிரமம் ஏற்பட்டிருக்கின்றது. இவ்வித அபிப்பிராயத்தையே

'गार्हस्थ्यमिच्छन्व्रतिकः कुर्याद्दारपरिग्रहम्'

'गृहस्थः सदृशीं भार्यां विन्देत'

என்கிற பிரமாணமான வசனங்களும் வெளியிடுகின்றன. குருகுலத்தில் சரிவர வித்தியாப்பியாசம் செய்த பிறகு அவர்களின் உத்தரவுபெற்று சாஸ்திரங்களில் கூறப்பட்ட பிராம்ஹம், தைவம், ஆர்ஷம், பிராஜாபத்தியம், ஆசுரம், காந்தர்வம், ராக்ஷசம், பைசாசம் எனப்பெயர்பூண்ட எட்டு வகையான விவாகங்களுக்குள்

'चतुरो ब्राह्मणस्याद्यान्प्रशस्तान्कवयो विदुः।
राक्षसं क्षत्रियस्यैकमासुरं वैश्यशूद्रयोः'

என்று கூறியபடி அவரவர்களுக்குரிய விவாகத்தை விதிப்படி நடத்தவேண்டும். அவ்விதம் நடக்கும் விவாகம்.

'सर्वास्वपि सवर्णासु पत्नीष्वक्षतयोनिषु'

என்கிற மனுவின் அபிப்பிராயப்படி ஸ்திரீ புமான் என்கிற மனுவின் இருவர்களும் வெவ்வேறு ஜாதியாயில்லாமல் ஏக சாதியாயிருந்து அதிலும் ஸ்திரீ ருதுவாகாமல் கன்னிகையாயிருந்து விவாகம் நடக்கவேண்டுமென்றும் அவ்விதம் விவாகம் செய்துகொண்ட தம்பதிகளுக்குண்டாகும் சந்ததிகள்தான் அந்தந்த ஜாதிகளின் தர்மங்களை யனுஷ்டிக்கவும் அதற்குரிய பலங்களை யடையவும் அருகர்களாகின்றார்கள்.

विधा नव गृहस्थस्य ईषद्दानानि वै नव ।
नव कर्माणि च तथा विकर्माणि तथा नव ।
प्रच्छन्नानि नवान्यानि प्रकाशानि पुनर्नव ।
सफलानि नवान्यानि निष्फलानि पुनर्नव ।
अदेयानि नवान्यानि वस्तुजातानि सर्वदा ॥

என்று இவ்விதம் சாஸ்திரானுசாரமாய்க் கிருகஸ்தாசிரமத்தையடைந்தவர்கள் அனுஷ்டிக்கவேண்டிய தர்மங்கள் சாஸ்திரங்களில் பல கூறப்பட்டிருந்தாலும் அவைகளில் சுருக்கமாய்ச் சிலவற்றை இங்கு நிரூபிக்கிறோம். கிருகஸ்தர்களால் அனுஷ்டிக்கக்கூடியதும் விலக்கக்கூடியதுமான கர்மாக்கள் ஒன்பது வகையாகக் கூறப்பட்டிருக்கின்றன. 1. விதை. 2. ஈஷத்தானங்கள். 3. நவகர்மாக்கள். 4. விகர்ம்மாக்கள். 5. பிரசன்னகர்மாக்கள். 6. பிரகாச கர்மாக்கள். 7. ஸபல கர்மாக்கள். 8. நிஷ்பல கர்மாக்கள். 9. கொடுக்கக் கூடாதவைகள்——இவைகளில் ஒவ்வொன்றிற்கும் பல பிரிவுகளுண்டு—அவையாவன 1. விதை: யாராகிலும் பெரியோர்கள் நமது கிருகத்தையடைந்தால் அவர்களை மரியாதையாய் வரவேற்று வாக்கு, மனம், நேத்திரம், முகம் இவைகளால் பிரியத்தைக் காண்பிவித்து அவர்களிடத்தில் க்ஷேமசமாசாரத்தை விசாரித்து தானும் பிரியமாகப் பேசி நன்கு ஆராதித்து கொஞ்சதூரம் தானும் கூடவந்து அவர்களை அனுப்பவேண்டும். 2. ஈஷத்தானம்: யாராவது அதிதிகள் வந்தால் கால் சுத்தம் பண்ண ஜலம், இருக்க இடம், ஆஸனம், தேய்த்துக்கொள்ள எண்ணை, போஜனம், சயனம், முதலிய சௌகரியங்களைத் தன் சக்தியையனுசரித்து அற்பமாகிலும் கொடுக்கவேண்டும். 3. கர்மாக்கள்: பிராதஸ்நானம், மூன்று காலங்களிலும் ஸந்தியாவந்தனம், ஜபம், ஹோமம், வேதங்கள், அதற்கு அங்கங்கள் என சாஸ்திரங்கள் இவைக

ளுடைய அத்தியயனம், சங்கரர், விஷ்ணு, கிருஷ்ணன், கணேசர், சுப்பிரமணியர்எனப் பெயர்பூண்ட தேவதா மூர்த்திகளில் தனக்கு இஷ்டமான யேதாவதோர் மூர்த்தியின் அர்சனம், வைசுவதேவமென்கிற கர்மானுஷ்டானம், பிதுருக்கள், தேவதைக்ள், குருக்கள், தபஸ்விகள், மனுஷ்யர்கள், தாய் தகப்பன் முதலியவர்களை அவரவர்களுக்குசிதமான ஆராதனங்களால் ஆராதிப்பதென்ன, இவைகள் கர்மாக்கள், இவைகளை நன்கு அனுஷ்டிக்க வேண்டும். 4. விகர்மாக்கள்: அஸத்தியம், பாரதாரகமனம், சாஸ்திரங்களால் சாப்பிடக்கூடாதென்று நிஷேதிக்கப்பட்டவைகளை உண்பது, போகக்கூடாத இடங்களுக்குச் செல்லுதல், பானம் செய்யக்கூடாதென்பதை பானம் செய்தல், களவு செய்தல், ஹிம்சை செய்வது, ஸாஹிருத் தர்மத்தைக் கைவிடுவது, கோட்சொல்லுவது, கபடம், காமம், குரோதம், த்வேஷம், முதலியவைகளென்ன, பிறர்களுக்கு அப்பிரியமான காரியங்களென்ன மற்றும் சாஸ்திரங்களுக்கு விரோதமான கர்மங்களென்ன இவைகள் விகர்மாக்களெனப்படும். இவ்விதமே

अनृतं पारदार्यं च तथाऽभक्ष्यस्य भक्षणम् ।
अगम्यागमनापेयपाने स्तेयं च हिंसनम् ॥
अश्रौतकर्माचरणं मैत्रधर्मबहिष्कृतं ।
नवैतानि विकर्माणि तानि सर्वाणि वर्जयेत् ॥
पैशुन्यमनृतं मायां कामं क्रोधं तथाप्रियम् ।
द्वेषं दम्भं परद्रोहं विकर्माणि विवर्जयेत् ॥

வைத்தியநாத தீக்ஷிதீய வர்ணாசிரமதர்மத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

आयुर्वित्तं गृहच्छिद्रं मन्त्रो मैथुनमौषधम् ।
तपो दानावमानौ च नव गोप्यानि सर्वदा ॥

என்கிற வசனத்தால் தன் ஆயுள், ஐசுவரியம், வீட்டுக்குள்

நடக்கும் கலகங்கள், பெரியோர்களுடைய உபதேசத்தால டையப்பட்டிருக்கும் மந்திரங்கள், தம்பதிகளின் புணர்ச்சி, ஔஷதம், தவம், தன்னால் பிறருக்குக் கொடுக்கப்படும் தானம், தனக்கேற்படும் அவமானம் ஆகிய இவைகளுக்குப் பிரசன்ன கர்மாக்களென்று பெயர். இந்தக் கர்மாக்களை வெளியிடாமல் ரகசியமாய் வைத்துக்கொள்ளவேண்டும். 6-வது பிரகாசமாய்ச் செய்யவேண்டிய கர்மாக்கள்: தன்னால் வாங்கப்பட்ட கடன்களைக் கொடுத்துத் தீர்ப்பது, வேத சாஸ்திரங்களின் அத்தியயனம், விக்கிரயம், கன்யா தானம், விருஷப உத்ஸர்க்கம்; இரகசியமாய் செய்யப்பட்ட பாபங்கள் முதலியவைகளைக் கிருகஸ்தர்கள் பிரசித்தமாய் நடத்தவேண்டியது. 7வது-ஸபலமான கர்மாக்கள்: மாதா, பிதா, குருக்கள், மித்திரர்கள் மிகவும் மரியாதையுடையவர்கள். தனக்கு விசேஷ உபகாரம் செய்தவர்கள் மிகவும் தைன்யத்தையடைந்தவன், ரக்ஷிக்கத் தகுந்த வார்ஸ் இல்லாதவர்கள் இவர்களுக்குச் செய்யப்படும் உபகாரத்திற்கு ஸபலகர்மாக்கள் என்று பெயர். 8-வது நிஷ்பலகர்மாக்கள், நல்ல நடத்தையில்லாதவன், ஸ்தோத்திரம் செய்கிறவன், சண்டைபோடுகிறவன், கெட்ட வைத்தியன், போக்கிரி, விகடம் பேசுவோன், வேலையன்றி பல இடங்களில் சஞ்சரிக்கும் மனிதன்; திருடன் முதலானவர்களுக்குச் செய்யப்படும் தானம் நிஷ்பல கர்மாக்களெனப்படும். 9-வது கொடுக்கக்கூடாத வஸ்துக்கள்: தன்னிடத்தில் பிறனால் இரக்ஷிப்பதற்காக வைக்கப்பட்ட தனம் ஆபத்துக் காலத்திற்காக வைக்கப்பட்டிருக்கும் நிதி தன் பத்னீ, அவளுடைய தனம், தன் குலத்தில் புத்திரர் முதலியவர்களிருக்கும்பொழுது சகல சொத்தையும் தானம் செய்வது முதலிய கர்மாக்கள் ஒருபொழும் கூடாது. பின்னும் கருணை, லஜ்ஜை, பொறுமை, நல்ல காரியங்களில்

சிரத்தை, உத்தமாதிகாரிகளிடம் வித்யாதானம் செய்வது, செய்த நன்றி அற்பமாயிருந்தாலும் மறக்காமலிருப்பது, எப்பொழுதும் தனக்குரிய அத்தியயனங்களை ஓதுதல், எச்சமயத்திலும் (यज्ञोपवीतं) அதாவது பூனூல் தரித்தல், அசூயையில்லாமலிருப்பது, பொறுமை, தயை, முதலிய குணங்கள் இவை கிருகஸ்தர்களுக்கிருக்கவேண்டும். கிருகஸ்தன் என்கிற இந்தப் பதத்திற்கு வீட்டிலிருப்பவன் என்று மாத்திரம் பொருளல்ல. இங்கு கூறப்பட்ட கர்மாக்களை நன்கு அனுஷ்டானம் செய்கிறவர்களுக்குத்தான் அப்பெயர். இவ்விதம் சாஸ்திரங்களால் செய்யவேண்டாமென்று தடுக்கப்பட்ட கெட்ட கர்மாக்களை விலக்கிவிட்டு அவசியம் அனுஷ்டிக்கவேண்டியதாகக் கூறப்பட்ட கர்மாக்களை தம் சக்திக்கு இயன்றவாறு எந்த கிருகஸ்தர்கள் அனுஷ்டானம் செய்கின்றார்களோ அவர்கள் அக்ஞானத்தாலுண்டாகும் பாபத்தை விலக்கிச் சிறந்த யோக மார்க்கத்தையடைந்து சகல துக்கங்களுக்கும் காரணமான இந்தச் சம்சாரத்திலிருந்து விடுபட்டு விசேஷமான சிரேயஸ்ஸை யடைகிறார்கள் என்பது திண்ணம்.

नित्यं स्वाध्यायशीलः स्यान्नित्यं यज्ञोपवीतवान् ।
सत्यवादी जितक्रोधो ब्रह्मभूयाय कल्पते ॥
सन्ध्यास्नानरतो नित्यं ब्रह्मयज्ञपरायणः ।
अनसूयुर्मृदुर्दान्तो गृहस्थः प्रेत्य वर्धते ॥
वीतरागभयक्रोधो लोभमोहविवर्जितः ।
सावित्रीजप्यनिरतः श्राद्धकृन्मुच्यते गृही ॥
मातापित्रोर्हितैर्युक्तो गोब्राह्मणहिते रतः ।
यज्वा च देवभक्तश्च ब्रह्मलोके महीयते ॥
त्रिवर्गसेवी सततं देवतानां च पूजनम् ।
कुर्यादहरहर्नित्यं नमस्येत्सततंसुरान् ॥
विभागशीलः सततं क्षमायुक्तो दयालुकः ।

ग्रहस्थस्तु समाख्यातो न गृहेण गृही भवेत् ॥
यथाशक्ति चरेत्कर्म निन्दितानि च वर्जयेत् ।
विधूय मोहकलिलं लब्ध्वा योगमनुत्तमम् ।
गृहस्थो मुच्यते बन्धान्नात्र कार्या विचारणा ॥ इति. ॥

இக்கருத்தைத்தான் ஸ்ரீ வியாஸபகவானும்

वर्णाश्रमविधिं कृत्स्नां कुर्वाणो मत्परायणः ।
तेनैव जन्मना ज्ञानं लब्ध्वा याति शिवं पदम् ॥

என்று கூறுகின்றார்கள்.

இன்னுமிவ்விஷயத்தில் இதுபோன்ற பிரமாணமான மகரிஷி வசனங்கள் பலவிருப்பினும் விரிவிற்கஞ்சி விடுத்தனம். இவ்விதம் அந்தந்த ஆசிரமத்திற்கு ஏற்பட்ட தர்மத்தை அதிகமோ குறைவோ, வேதம், ஸ்மிருதி, புராணம், முதலிய எந்தப் பிரமாணத்தால் கூறப்பட்டாலும் அதில் சிறிது பெரிதென்கிற வித்தியாசமான தன் அபிப்பிராயத்தைக் கலக்காமல் சாஸ்திரமிவ்விதம் நம்மையனுஷ்டிக்கும்படி உத்திரவு செய்கின்றது. சாஸ்திரமென்றால் श्रुतिस्मृती ममैवाज्ञा என்று பகவானுலேயே நேரில் சொல்லப்பட்டிருப்பதால் அது ஈசுவரனுடைய ஆக்ஞையே. அந்த ஆக்ஞையை வேறுவிதம் ஆக்ஷேபிப்பதற்கு நாம் அனதிகாரிகளானதால் ஏற்பட்டபடி நடத்த மாத்திரம் அவசியம் கட்டுப்பட்டவர்களாகிறோம், என்று உறுதியான சங்கற்பத்துடன் அவரவர்களும் தங்களுக்கேற்பட்டிருக்கும் கர்மாக்களைச் சக்திக்கியன்றவாறு அனுஷ்டித்து வரவேண்டும். இவ்விதம் தன் கர்மாவை அனுஷ்டித்து வருவதில் தவறு நேர்ந்தாலும் அதுவும் சிரேயஸ்ஸையும் பொருட்டேயாகும். வேறு ஆசிரமத்திற்கோ, வர்ணத்திற்கோ, ஏற்பட்ட கர்மாவை எவ்வளவு பூர்ணமாய் நாம் அனுஷ்டித்தாலும் அதினல் நமக்கு அற்பமேனும் பயனில்லை தோஷமும் ஏற்படும். இவ்விதமே

‘स्वधर्मे निधनं श्रेयः परधर्मो भयावहः’

என்று கீதையிலும் பகவானால் கூறப்பட்டிருக்கின்றது. ஆகையால் தற்காலத்திலேற்பட்டிருக்கும் விபரீதவாதங்களைக் கேட்டுப் பிரமத்தையடையாமல் அவரவர்களும் அநாதிகாலம் தொடங்கி நடைபெற்றுவரும் சுருதிஸ்மிருதி முதலிய பிரமாணங்களில் கூறியவாறு தங்கள் தங்கள் கர்மாக்களை யனுஷ்டித்து நற்கதியை யடையும்படி வேண்டுகிறோம்.

ஸ்திரீ தர்மம்.

ஆரியர்களான நம் பெரியோர்கள் உலகத்தில் ஆன்மாக்கள் உஜ்ஜீவிக்கும்பொருட்டு ஈசுவரனால் அருளப்பட்டுள்ள வேதத்தினர்த்தத்தை அனேகவிதமான ஸ்மிருதிகள் மூலமாகவும், புராணங்களின் மூலமாகவும் அருளிச்செய்திருக்கின்றனர். இவ்வரிய பெரிய கிரந்தங்களில் சொல்லப்படாத மனுஷ்யனுக்குரித்த தர்மங்கள் வேறு எவ்விடத்திலும் எக்காலத்திலும் கேட்க கிடைப்பது இயலாத கார்யமென்று திண்ணமாய்ச் சொல்லும்படியான உரிமையை நாம் பெற்றிருக்கின்றோமல்லவா? மஹாபாரதம் முதலிய மஹேதிகாஸங்கள் இவ்விதமான பிரதிஜ்ஞையைச் செய்துகொண்டல்லவோ ஆரம்பித்திருக்கின்றன.

“यदिहास्ति तदन्यत्र यन्नेहास्ति न तत्क्वचित्”

'இங்கு எது உள்ளதோ அதுவே வேறிடத்திலும் இருக்கும், இங்கு எது (சொல்லப்பட) இல்லையோ அது எங்கும் கிடையாது' இவ்விதம் ஆன்மகோடிகள் உஜ்ஜீவிக்கும்படியான் ஸகல தர்மங்களையும்பற்றிச் சொல்லும் ஒவ்வொரு சாஸ்திர கிரந்தமும் மற்றெல்லாத் தர்மங்களையும்விட ஸ்திரீதர்மத்தையே மிகவும் பெரிதாகக் கொண்டாடுகின்றது.

"स्त्रीमूलः सर्वधर्मः"

"எல்லா தர்மங்களும் ஸ்திரீயை காரணமாயுடைத்தானவை" இது எப்படியெனின் நம் ஆரியதர்மங்களில் எல்லாம் குலத்தினுடைய சுத்தியைப் பொருத்திருக்கின்றன. பாவனமாயுள்ள குலம் பரிசுத்தமான ஸ்திரீயினால்தான் ஏற்படவேண்டும். அப்பொழுதுதான் அக்குலத்தில் ஏற்படும் சரீரத்துக்குச் சுத்தி ஏற்படும். இவ்விதமான சுத்தியின்றிச் செய்யும் கர்மங்கள் யாவும் பலனற்றவையாம். இதுவுமன்றி மனிதனுக்குரிய நான்கு ஆசிரமங்களிலும், கிருஹஸ்தனுடைய ஆசிரமமே மிகவும் உயர்ந்தது. ஏனெனில் பாக்கி மூன்றுசிரமங்களையும் ஆஹாரத்தினாலும் உபசாரத்தினாலும் ரக்ஷிக்கவேண்டிய கடமை இவ்விரண்டாவதான இல்லறத்திற்கே.

இந்த கிருஹஸ்தாசிரமம் ஸகல விதங்களிலும் ஸ்திரீயினுடைய ஸஹாயத்தை அபேக்ஷித்தே நடக்கவேண்டியது. ஸகல தர்மங்களிலும் ஸ்திரீயும் புருஷனும் அர்த்தபாகியாகிறார்கள். தர்மத்திற்காகவே நம்மாரியர்கள் விவாஹம் செய்துகொண்டு கிருஹஸ்தாசிரமத்தைப் பிரவேசிக்கிறார்கள். இதுவே தர்மத்தை மூலமாக வைத்துக்கொண்டு ஏற்படும் நம்மவர் விவாஹத்திற்கும் பிராணி சுபாவத்தின் தூண்டுதலையே பிரதானமாக வைத்துக்கொண்டு ஏற்படும் அயல் தேயத்தார் விவாஹ முறைக்கும் உள்ள பேதங்கள்

பல. இப்படியிருந்தும், நம் விவாஹத்தையும் அயல் நாட்டாரதுபோல் ஆகச் செய்யப்படும் யத்தினங்களைப் பார்த்துப் பரிதபிக்கவேண்டியதாயிருக்கின்றது. மேலும் உலகத்தில் விருத்தியாகும் சந்ததிகளுடைய குணம், ஆசாரம் இவைகள் மூலமாய் உலகத்தினுடைய நடத்தைக்கே ஸ்திரீகள் உத்திரவாதிகள். ஆகையால் நம்முடைய வர்ணாசிரம தர்மம் முழுவதும் ஸ்திரீதர்மத்தினுடைய பரிசுத்தியை யொட்டியே ஏற்பட்டிருப்பதால்தான் பெரியோர்கள் இத்தர்மத்தை மற்றெல்லாவற்றிலும் சிரேஷ்டமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் அந்தப் பரிசுத்தி என்பதின் ஸ்வரூபம் என்ன? இவ்வினாவிற்கு பொதுவாய் உலகத்தார் ஒரே நாயகனிடத்தில் பக்தியாயிருப்பதே சுத்தியென்று நினைக்கலாம். ஆயினும் நாம் ஆஸ்திகர்களாய்ச் சாஸ்திர சரணர்களாயிருப்பதினால் சாஸ்திரங்களில் செப்பியிருக்கும் தர்மங்களையெல்லாம் ஒன்று சேர்த்து அந்தப் பரிசுத்தியெனக் கொள்ளலாம். ஆயினும் அவ்விதமாகத் திரட்டிவரையும் பெரும் உலக கைங்கரியத்தைச் செய்ய என்னிலும் பெரிய சான்றோர் முன்வருவார்களாதலால் ஸாமாந்நியமான ஸ்திரீ தர்மங்களைச் சங்கிரஹமாகச் சொல்லியிருக்கும் பைடீநஸரென்னும் மகரிஷியின் வடமொழி சுலோகங்களை மாத்திரம் மொழிபெயர்த்து நமது ஆசாரியர்களால் அனுகிரஹிக்கப்பட்ட "ஆரிய தர்ம"த்தின் முதல்ஸஞ்சிகையில் இதை வெளிப்படுத்தும்படி மேற்படி பத்திராதிபரை வேண்டிக்கொள்கிறேன்.

ஸகல வேதங்களிலும் கொண்டாடப்பட்ட பரப்பிரம்மஸ்வரூபமுடைய பகவானானவர் தமது திவ்விய சக்தியினால் இவ்வளவு உலகங்களையும் அதில் அனேகப் பிராணிகளையும் ஸ்ருஷ்டித்துக் காப்பாற்றி வருகிறார். ஸகலவித மான அந்த ஜீவன்களுக்கு உணவுகள் பலவிதமாக இருந்

தபோதிலும் பானத்துக்குரிய வஸ்துவானது ஜலம் ஒன்றேயாகும். ஸகல ஜீவன்களுக்கும் ஜலம்தான் ஆதாரமாகவிருக்கின்றது. ஜலமில்லாமல் ஒரு நிமிஷம்கூட உயிர் நிலைப்பதரிது. ஜலத்திற்கு அமிருதம் என்று பெயர்.

எந்தக் காரியமும் ஜலத்தின் உதவியின்றி நிறைவேறமாட்டாது. அதின் உதவி இல்லாவிடில் பலனுண்டாகாது. இன்னும் அநேகவித மகிமைகள் ஜலத்திற்கிருக்கின்றன.

இவ்வளவு பெருமைபொருந்திய ஜலமானது "தன்னை (ஜலத்தை)ப் பதிவிரதா ஸ்திரீகள் ஆதரவுடன் தங்கள் கைகளினால் எப்போது ஸ்பரிசிப்பார்கள்" என்று மிகவும் கவலையுற்றிருக்கிறதென்று பூர்வீக மஹரிஷிகள் சொல்லியிருக்கிறார்கள். மேலும் இதற்குக் காரணம் சாஸ்திர விதிப்படி விவாஹம் செய்துகொண்டு தங்கள் பாதிவிரத்தியத்தை முக்கியமாய் அனுஷ்டிப்பதே தவிர வேறல்ல.

ஆகையால் ஸ்திரீகள் உசிதமான காலத்தில் விவாஹம் செய்துகொண்டு பர்த்தாவை இடைவிடாது பூஜித்துப் பணிவிடைசெய்து வருவதுதான் அவர்களின் முக்கியமான கடமை. பர்த்தாவைக் காட்டிலும் ஸ்திரீகளுக்கு வேறு தெய்வம் கிடையாது என்றும் சாஸ்திரத்தில் சொல்லியிருப்பதால் ஸகல ஸ்திரீகளும் பதிவிரதா தர்மத்தை அவசியம் அனுஷ்டிக்கவேண்டும். இதுகாரணம்பற்றி ஸ்திரீகளுக்கு இதை உபதேசமாய்ச் சொல்லுகிறேன்.

இனி ஸகலஜாதி ஸ்திரீகளுக்கும் பொதுவான தர்மங்கள் உபதேசிக்கப்படுகின்றன.

வஸ்திரம் ஆபரணம் அலங்கார ஸாமக்கிரி இவைகள் பர்த்தாவினால் கொடுக்கப்பட்டால் மாத்திரம் ஸ்திரீகள் கிரஹித்துக்கொள்ளலாம்.

அவர்களை கட்டாயப்படுத்தி இது போதாது அதிகமாய்த்தான் வேண்டுமென்று நிர்பந்திக்கலாகாது. அந்தக் கரணத்தினாலும் சரீரத்தினாலும் காரியங்களினாலும் கணவனுடைய இஷ்டத்தை அனுஸரித்தே ஸ்திரீகள் நடந்துக் கொள்ளக் கடவர்கள். சில சமயங்களில் கணவனிடம் தோழிமாரிடம்போல் நடந்துகொள்ள வேண்டியதும் உண்டு. ஸன்மார்க்க விஷயத்திலோ பர்த்தாவினுடைய சரீரச் சாயைபோலவே அவரிஷ்டத்தை அனுஸரிக்கவேண்டும். இருவரும் மனமொத்துச் செய்யும் ஸத்காரியம்தான் நிறைவேறிப் பலனைத் தரும். இது ஸமுதாயமாயும் சுருக்கமாயும் உள்ள தர்மம். இனி விசேஷ தர்மங்கள் சொல்லப்படுகின்றன.

அவையாவன—பர்த்தா எழுந்திருப்பதற்கு முன்னமே ஸ்திரீகள் சயனத்தை விட்டெழுந்து அக்காலத்திற்குரிய சரீர சுத்தியைச் செய்துகொண்டு சயனாதிகளை அப்புறப் படுத்திவிட்டுப் பின்பு கிருஹத்தில் கோமயத்தினால் சுத்தி செய்யவேண்டிய பாகங்களைச் சுத்தி செய்து வாசற்படி திண்ணை இடைகழி முதலிய ஸ்தானங்களில் கோலம் முதலியவைகளால் அலங்காரம் செய்யவேண்டியது. பிறகு பாகாதிகளுக்கு உபயோகப்படுகிற பாத்திரங்களைச் சுத்தி செய்து வைத்துவிட்டு அடுப்புக்களை சுத்தம் செய்யவேண்டியது. பிறகு ஸ்னானம் செய்து சுத்தமான வஸ்திரம் தரித்துக்கொண்டு ஔபாஸனம் அல்லது அக்னி ஹோத்திரம் முதலிய ஹவன காரியங்களுக்குரிய ஸாமக்கிரிகளில் சுத்திசெய்யவேண்டிய ஸாமக்கிரிகளைச் சுத்திசெய்து வைத்துப் பூஜோபகரணங்களையும் சுத்திசெய்து வைத்துவிட்டு அடுப்புமூட்டிப் பாகம் செய்தானவுடன் பர்த்தாவுக்குத் தெரியப்படுத்தவேண்டியது. பூஜை வைசுவதேவம் முதலியவை முடிந்தவுடன் யாராருக்கு போஜனம்

செய்விக்கவேண்டுமோ அவர்களுக்குப் போஜனம் செய்வித்துத்தான் அதிகமாய் எவர்கண்ணிலும் தென்படாம விருந்து போஜனம் செய்துவிட்டுக் கிரகங்களை சுத்தம் செய்தபின் வீட்டிலுள்ள பெரியோர்களுக்கும் பர்த்தாவுக்கும் வேண்டிய உபசரணைகளைச் செய்யவேண்டும். ஆனால் ஸ்திரீகள் தாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் அந்தந்தச் சமயங்களுக்கேற்றபடி யுக்தியுடன் செய்ய வேண்டும்.

இவ்விதம் தனக்கு உத்தமமான தெய்வமென்று சொல்லக்கூடிய பர்த்தாவுக்கு பணிவிடை செய்துவரும் ஸ்திரீயானவள் இவ்வுலகில் நல்ல கீர்த்தியையும் லோகாந்தரத்தில் தன் பர்த்தாவுடன் கூடியிருக்கும் பெரும் பாக்கியத்தையும் பெறுகிறாள்.

மேலும் பிறரிடத்தில் தோஷம் சொல்லுதல், கலகம், செய்தல் பெரியோர்களுக்கு முன்பாக இரைந்து பேசுதல், அவர்களுக்கு எதிரில் சயனித்தல் இவ்விதகாரியங்களைத் தூரவிலக்க வேண்டும்.

இந்து மதஸாரக் கொள்கை.

இந்தப் பிரஸ்தாப விஷயத்தைப் பற்றித் தொடங்குவதற்கு முன் இப்பூமண்டலத்தின் கண் மேல் நாட்டார் கீழ் நாட்டார் யாவராலும் கொண்டாடப்படத்தக்க நம்முடைய முன்னோர்களுடையவும் சாஸ்திர பிரமாணங்கள் படிக்கும் மதம் என்றால் என்ன? மதத்தின் கொள்கைகள் என்ன? அவைகள் எத்தன்மையன? யாரால் எக்

காலத்தில் உண்டானவை? நம்முடைய தற்காலத்துச் சௌகரியத்தின்படி சீர்திருத்தக் கூடியதா? சீர்திருத்துவது அத்தியாவசியமா? என்பதைச் சற்று விசாரிப்போம். "மதம்" என்கிற பதமானது "நினை" அல்லது "எண்ணு" என்று பொருள்படுகிற "மந்" என்ற சம்ஸ்கிருத பதப்பகுதியினின்று உண்டாயிருக்கிறது. ஆகையால் "மதம்" என்பதற்கு "கட்டுப்பாடுகள்" என்று இதர மதஸ்தர்கள் அர்த்தம் பண்ணினாலும்கூட 'மதம்' என்பதற்கு யாதொரு பயமுறுத்தல்களும் நிர்பந்தங்களுமன்றியில் ஸ்வேச்சையாய் மனதினால் யோசித்து நம்முடைய சுவய புத்தியினால் தீர்மானிக்கும்படியாய் வழிகாட்டக்கூடியதுதான் என்று அர்த்தமாகிறதே ஒழிய குற்றவாளிகளுக்காக ஏற்பட்ட "இந்து தேசத்துத் தண்டனை சட்டம்" முதலானவைகளைப்போன்ற கட்டுப்படுத்துவதான ஏவல்களல்லவென்று ஸ்பஷ்டமாய் வெளிப்படுகிறது. இவ்வாறே "மதம்" என்பதற்குச் சரியான ஆங்கிலேய மதமாகிய "Religion" எனகிற பதம் "யோசி" "சீர்தூக்கிப்பார்" என்று அர்த்தம் கொள்ளும்படியான "Re-legere" என்னும் பதத்திலிருந்து உண்டாயிருப்பதாய் Cicero என்பவரால் விளக்கப்பட்டிருக்கிறது. முன்னும் ஜர்மனி தேசத்தில் வடமொழியில் தேர்ச்சியடைந்து பிரசித்திபெற்ற மாக்ஸ்மல்லர் (Maxmuller) என்பவரும் "மதம்" என்பதை வெவ்வேறான உபாதிகளில் இருக்கும்படியான முடிவு பெறாத பராபரவஸ்துவை அறிந்து கொள்ள வழிகாட்டுகின்றதாகவும் சாமான்னிய புத்திக்கும் யுக்திக்கும் எட்டாததான பராசக்திதான் மதம் என்று பதலக்ஷணத்தைச் சொல்லியிருக்கிறார். சில மதஸ்தர் "மதம்" என்பதற்குச் சரியான "Religion" என்னும் பதம் "கட்டுப்படுத்தல்" என்று அர்த்தம் கொள்ளும்படி

யான "Reli-gare" என்ற பதத்தினின்று உண்டாகியிருப்பதாயும் ஆதலால், சுவேச்சையாய் யோசிக்கவிடாமல் சம்பந்தபட்ட மனிதர்களைக் குருட்டுத் தனமாய்க் கட்டுப்படுத்துகிற, ஒருவாறு தீர்மானிக்கப்பட்ட கொள்கைகளடங்கிய மதசித்தாந்தம்தான் என்ற வற்புறுத்தினபோதிலும் வடமொழியை நன்றாய் ஆராய்ந்து கற்றுணர்ந்த அனேக ஆங்கிலேய ஜர்மானிய நாட்டார்களும் நம்முடைய மதத்தை அறிந்து நம்முடைய மதத்தை நிலைநாட்டக் கருதி வெகுப் பிரயாசை எடுத்துக்கொண்டு "பிரம்ம ஞான சங்கம்" (Theosoaphical Society) என்று ஸ்தாபித்து அதில் வெகுகாலம் உழைத்துக் காலம் சென்ற கர்னல் ஆல்காட்டு துரையவர்களும் மேற்படி Cisero (ஸிஸரோ) Max Muller (மாக்ஸ் மல்லர்) இவர்களுடைய அர்த்தத்தையே ஸ்தாபித்திருக்கிறார்கள். இந்த அர்த்தத்திற்கு அனுசரணையாகவே சுருதிகளிலும் ஸ்மிருதிகளிலும் சொல்லாநின்ற, கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் இன்னும் மற்ற முக்கியமான உலக உற்பத்தி முதலிய முக்கிய விஷயங்களைப்பற்றியும் நாம் கவனித்துப் பார்ப்போமாகில், இன்னகாரியம் இன்னபயனை விளைவிக்கும் என்று சங்கதிகளை நம்முடைய ஞானத்திற்கும் பரியாலோசனைக்கும் எடுத்துக்காட்டுகின்றதே யொழிய இன்ன காரியம் இவ்விதமாய்த்தான் செய்யவெண்டும் என்று பயமுறுத்தல்களினால் நிர்பந்திக்கவில்லை. அதாவது எப்படி அங்ககணிதம் "நான்கும் ஐந்தும் ஒன்பது" "ஆறில் நான்கு போனால் இரண்டு" "எட்டையும் ஏழையும் பெருக்கினால் ஐம்பத்தாறு" என்னும் கணிதத்தின் சுவாபாவிகத்தைப்பற்றிச் சொல்லுகின்றதோ, எப்படி க்ஷேத்திர கணிதத்தில் "ஒரு முக்கோணத்தில் ஏதாவது இரண்டு பக்கம் மூன்றாவது பக்கத்தைவிடப் பெரியது" என்று நியாயத்தைக் கற்பிக்

கின்றதோ, எவ்வாறு "Physics "என்ற சாஸ்திரத்தில் அந்தரத்திலுள்ள எந்த பதார்த்தத்தையும் ஆகர்ஷிக்கும் படியான சக்தி பூமிக்கு இருப்பதான ஞாயத்தைக் கற்பிக் கின்றதோ அவ்வாறே சுருதியாதி பிரமாணங்களில் கர்ம யோகத்தில் பலாபேக்ஷையன்றி, ஒருவனுக்கு உரித்தான ஒரு கர்மத்தைச் செய்தால் அந்தக் கர்மமானது வீணாய்ப் போகாமற் சித்தத்தைச் சுத்திசெய்து, சித்தசுத்தித்வா ரா ஞானம் உண்டாகி ஞானத்வாரா மோக்ஷமுண்டாகு மென்றும், மேற்படி கர்மங்களைப் பலாபேக்ஷையுடன் செய்தால் இன்னின்ன கர்மம் இன்னின்ன பலனைத்தரு மென்றும், சாஸ்திர விரோதமான கருமங்களைச் செய்தா லும் சாஸ்திரரோக்தமான காரியங்களைச் செய்யாவிட்டா லும் இன்னின்ன தீமை விளைவிக்குமென்றும் ஆஸ்திக்கிய புத்தியுள்ளவர்களுக்குக் கற்பித்து அதன்படி நடந்து கொ ள்ள உதவி புரிகின்ற நியாய சாஸ்திரத்திற்கும் தர்க்க சாஸ்திரத்திற்கும் ஒத்த சாஸ்திரமாக விருக்கின்றதேதவிர மற்ற மதங்களைப்போல் "கல்லைக் கும்பிடாதே, மரத்தைக் கும்பிடாதே. அந்தத் தெய்வத்தையே நம்பு. இந்தத் தெய் வத்தையே நம்பு. இல்லாவிட்டால் நரகத்திற்கு ஏகுவாய் என்று பயமுறுத்தல்களினால் நிர்ப்பந்தித்து யுக்தி புத்தி சுவானுபாவத்தின் மூலமாய்ச் சிரவண மனன நிதித்தி யாஸனம் செய்து நன்மை தீமைகளைப் பகுத்தறிய ஒட் டாமற் தடுக்கவில்லை.

மேலும் நம்முடைய மதத்திற்கு பிரமாணங்களாகிய சுருதி, ஸ்மிருதி, புராண, இதிஹாசங்களின், முதன்மை யான சுருதியானது சுருதியிலேயே சொல்லப்பட்டபடி க்கும் மனுதர்ம சாஸ்திரத்தில் முதலாவது அத்தியா யத்தில் 3வது சுலோகத்திலும் 23வது சுலோகத்திலும் சொல்லியபடி யாவராலும் சிருஷ்டிக்கப்படாததாயும் கணக்

கிடக் கூடாத யுகங்கள், மஹாயுகங்கள் கல்பங்கள்தோறும் அனாதியாய் விளங்கிக்கொண்டு ஒவ்வொரு சிருஷ்டி காலத்திலும் அந்தந்த சிருஷ்டியிலேற்படும் பிரம்மாவினால் அக்னி, வாயு, சூரியன் மூலமாய் வெளிப்படுகிறது. அப்படிப் பிரபஞ்ச தத்துவங்களடங்கிய இந்த வேதமானது அனாதியல்லவென்றும் யாவராலும் சிருஷ்டிக்கப் படுவதென்று சொல்லுவதும் ஏற்கனவே சொன்னபடி நான்கும் ஐந்தும் ஒன்பது என்றும் கணித சாஸ்திர சம்பந்தமான நிதர்சனமான நியாயத்திற்கும் இன்னும் மேற்சொல்லிய மற்ற இயற்கைச் சாஸ்திர நியாயங்களுக்கும் ஆதி ஏற்பட்டிருக்க வேண்டுமென்றும் யாரேனும் ஒருவரால் சிருஷ்டிக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும் நினைக்கத் துணிவது எவ்வளவு புத்தியீனமோ அவ்வளவு புத்தியீனமென்று நம்மில் அநேகருக்குத் தெரிந்த விஷயம். எப்படித் தலைப்பில்லாத பாவ பதார்த்தத்திற்கு நுனி கிடையாதோ அவ்வாறே ஆதியில்லாத வேதத்திற்கு அந்தமும் கிடையாது. "Physics" என்ற மேல் நாட்டின் இயற்கைச் சாஸ்திரத்தில் சொல்லியபடி ஒரு பதார்த்தத்தைச் செய்யவும் அழிக்கவும் வேறுவிதமாக மாற்றவும் "Force" என்று சொல்லும்படியான சக்திப் பிரயோகம் அவசியம். மேலும் ஒரு பதார்த்தத்தைச் செய்ய எவ்வளவு சக்தி அல்லது வல்லமையைப் பிரயோகிக்கிறோமோ அவ்வளவு வல்லமை அழிப்பதற்கும் வேறு விதமாய் மாற்றுவதற்கும் பிரயோகிக்கவேண்டும். அப்படிக்கிருக்க வேதமானது யாருடைய வல்லமையினாலும் சிருஷ்டிக்கப்படாமல் தானாய் விளங்கும்பொழுது யாருடைய வல்லமையினால் அழிக்கப்படவும் வேறாய் மாற்றப்படவும் முடியும்? ஈசுவராம்சத்தையுடைய வேதத்தை யாவராலும் அப்படிப் பாதிக்கப்பட முடியாதென்பது திண்ணம்.

அவ்வண்ணமே ருக்வேதத்திலும், யஜுர் வேதத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது அனுதியான வேதத்தில் சொல்லியதுபோக விசேஷமாய் எதை மனு சொல்லுகிறரோ அதை ஔஷதமாக நினைக்க வேண்டுமென்று அர்த்தமாகிறபடி பிரம்மாவிடத்திலிருந்து உண்டான விராட் புருஷனுலே சிருஷ்டிக்கப்பட்டிரானின்ற மனுவினுல் வேதத்திற் சொல்லப்பட்ட தர்மார்த்த காம்மிய மோக்ஷங்களுக்குச் சாதனங்களே வேத சம்மதமாகவே விரிவாய்ச் சொல்லப்பட்டு அதுவே "மனுஸ்மிருதி" என்னும் பெயருடன் விளங்கி வருகின்றது. மேற்சொன்ன சுருதிப்பிரமாணங்களாலே அங்கீகரிக்கப்பட்ட மனுஸ்மிருதியிற் சொல்லிய

'श्रुतिं पश्यन्ति मुनयः स्मरन्ति च तथा स्मृतीः'

அதாவது வேதங்கள் மனுஸ்மிருதி இவைகளல்லாமல் இன்னும் பல பல முனிகள் தோன்றி வேதங்களே யாராய்ந்தறிந்து அப்படிக்கறியப்பட்ட எந்த விஷயங்களே மேற்படி முனிகள் ஸ்மரிக்கிறர்களோ அவைகள் தாம் ஸ்மிருதிகள் என்றபடி யாக்ஞவல்க்கிய பாராசர்யாதி அனேக ஸ்மிருகள் மனுதர்ம சாஸ்திரத்தில் முதலாவது அத்தியாயத்தில் 83, 85வது சுலோகத்தின்படி மனிதர்களுடைய ஆயுளும், சக்தியும், தர்மமும் யுகத்திற்கு யுகம் பலவாருய் மாறுவதால் யுகத்திற்குத் தக்கபடியும் மனிதர்களுடைய சக்திக்குத் தக்கபடியும் அப்போதைக்கப்போது ஏற்பட்டு இப்பொழுது செல்லாநின்ற கலியுகத்திற்கு

'कलौ पराशरस्मृतिः'

என்றபடி பாராசர ஸ்மிருதி நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஆகையால் மனுதர்ம சாஸ்திரத்தில் 2வது அத்தியாயத்தில் 10, 11வது சுலோகங்களில்

श्रुतिं पश्यन्ति मुनयः स्मरन्ति च तथा स्मृतीः ।
तयोः प्रमाणमुभयं प्रमाणैः प्रमितं भुवि ॥
योऽवमन्येत ते तूभे हेतुशास्त्राश्रयान्नरः ।
स साधुभिर्बहिष्कार्यो नास्तिको वेदनिन्दकः ॥

என்றபடி வேதங்களையும் மேற்படி வேதங்கள் முனிகளால் பார்க்கப்பட்டு அவர்களால் ஸ்மரிக்கப்பட்ட ஸ்மிருதிகளையும் பிரமாணங்களாக நினையாமல் பெரியோர்களால் செய்யப்பட்ட வாஸ்தவார்த்தத்தை விட்டுவிட்டு அப்போதைக்கப்போதிய சௌகரியப்படிக்கு எவர்கள் மேற்படி சுருதி ஸ்மிருதிகளுக்கு விரோதமான தர்க்கசாஸ்திர யுக்தியைக்கொண்டு ஆக்ஷேபித்து அவமானம் செய்கிறார்களோ அவர்கள் சாதுக்களினால் பஹிஷ்காரம் செய்படவேண்டியதோடு அவர்கள் நாஸ்திகர்கள் என்றும் சொல்லப்படவேண்டியதாயிருப்பதினால் மேற்படி ஸ்மிருதி வாக்கியப்படி சுருதி, ஸ்மிருதிகள், மேற்படி ஸ்மிருதிகள் செய்த ருஷிகளுடைய அனுஷ்டானம் பெரியோர்களுடைய அனுஷ்டானம் முதலியவைகளைத் தர்மத்திற்குக் காரணமும் அடையாளமுமாக நினைத்து அவைகளின்படி நெறிதவறாமல் நடக்க வேண்டியது. அப்படியே நமது முன்னோர்களும் அவ்வாறே அனுஷ்டித்தும் மேற்படி சுருதி ஸ்மிருதிகளுக்குக் கௌரவம் கொடுத்து இப்பொழுது அவர்களுடைய சுருதி ஸ்மிருதி புராண இதிஹாஸாதி பிரமாணங்களுடன் அவர்களும் அவர்களுடைய சந்ததிகளாகிய நாமும் பெரும்பாலும் உலக்மெங்கும் யாவராலும் கொண்டாடப்பட்டு வருகிறோம். அப்படி நம்முடைய முன்னோர்களும் நம்முடைய பிரமாணங்களும் கொண்டாடப்படுவதற்குத் திருஷ்டாந்தம்.

As to Hinduism, it is a solemn thought that at least 200 Millions of our fellow subjects are adherents of that religion. And yet it is remarkable

characteristic of Hiduism that it neither requires nor attempts to make converts. Nor is it by any means at present diminishing its numbers. Nor is it being driven off the field as might be expected by being brougt into contact with two such proslytising religions as Christianity and Mahammadanism. On the contray, it is at present rapidly increasing! For, a man becomes a Hindu by merely born a Hindu ......It claims to be the one religion of humanity, of human nature, of the entire world. It cares not to oppose the progress of Christianity, nor of any other religion.......and Hinduism is founded on a very subtle system of pantheistic philosophy, a system which the human intellect most naturally thinks out for himself; a system which is, in some respects, almost identical with that thought out by Spinosa and the profoundest thinkers of Modern Europe."

அதாவது உலகத்து ஜனசங்கியையில் குறைந்தது இப்போது 200 லட்சம் இந்துமதத்தைச் சார்ந்தவர்களாகயிருக்கிறார்களென்றும், ஆயினும் மற்ற மதங்களிலிருந்து சேர்ப்பதாவது அல்லது சேர்க்க முயலுவதாயிராத பிரசித்தமான குணத்தை இந்த மதம் உடைத்தாயிருப்பதாயும் இவ்வாறு திருப்தியோடு கூடியிருப்பதினால் மதத்தைச் சார்ந்தவர்களின் சங்கியை குறையவேண்டியிருக்க எவ்விதத்திலேனும் குறையாமலும், இங்ஙனம் சாத்விக சுபாவத்தோடுகூடிய மதத்திற்கு ஏற்படவேண்டிய விதியின்படி மிக்க பலவந்தத்துடன் தன் மதத்திற்குச் சேர்த்துக்கொள்ள பிரயத்தனப்படுகிற இதர மதங்களாகிய கிறிஸ்தவ மதம் மகம்மதிய மதம் இவைகளால் இந்த ஆர்யாவர்த்த பூமியினின்று எள்ளளவேனும் துரத்தப்படாமல் நாளுக்கு நாள் அதிதீவிரமாய் விருத்தியாய்க் கொண்டு வருகிறதென்றும் இந்துவானவன் பிறப்பினாலே மாத்

திரம்தான் இந்துவென்றும் இந்த ஆர்யமதமானது உலக முழுவதிலுமுள்ள எல்லா மானிடர்களுக்கும் பொதுவானதாக பாதகியத்தைக் கொண்டாடுவதாயும்

'सर्वं विष्णुमयं जगत्'

என்கிறபடி பிரபஞ்சம் யாவற்றும் ஈசுவரமயமென்று நம்புகின்ற 'தத்துவ சாஸ்திரமென்றும் இப்பேர்பட்ட இந்த தத்துவ சாஸ்திரமானது மனுஷியனுடைய புத்திக்கு இயற்கையாய் எட்டுவதாயும் சில விஷயங்களில் Spinosa (ஸ்பினோஸா) முதலான இப்போதைய ஐரோப்பா தேசத்துத் தீர்க்கதர்சிகளான தத்துவ சாஸ்திரிகளாலே சிந்திக்கப்பட்ட நூல்களுக்கு ஒத்ததாயிருப்பதாயும் பலவாறாக, இந்து மதத்திற்கு அனுகுணமாயிராதவும் இந்தியாவில் கிரிஸ்தவ பாதிரிமார்களுடைய கிருஷிகளை மிக்க அன்புடன் ஆதரிக்கும் தன்மையுடையவராயும் நம்முடைய ஸம்ஸ்கிருத பாஷையை நன்றாய்க் கற்றுணர்ந்த ஸர் மானியர் வில்யம்ஸ் (Sir Manier Willians) என்பவரால் பல உபந்நியாஸங்களில் சொல்லியிருப்பதோடு கூட ஜர்மானியதேசத்து சம்ஸ்கிருதப் புலவரான மாக்ஸ் மல்லர் (Professor Max Muller.)

"The sacred books of the east are the most ancient documents in the history of the mind .... The ancient Hindus are a nation of 'Philosophers என்றும் இன்னும் அனேக ஐரோப்பிய இப்போதிய கற்றறிந்த புலவர்கள் இந்துக்கொள்கைகளும் அவர்களுடைய நாகரீகங்களும் மிகப்புராதனமென்றும் மற்ற மதங்களின் கொள்கைகளும் தத்வங்களும் நம்முடைய மதத்தின் சேஷம்தான் என்றும் பலவாறாகப் பல பல காலங்களில் சொல்லியிருக்கிறார்கள்.

சுப்பிரமணிய ஐயர்.